**செய்தி வெளியீடு எண்: 405** **நாள்: 06.07.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(07.06.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த தினமான ஜூலை 7ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கோழியாளம் எனும் கிராமத்தில் இரட்டைமலை – ரெங்கநாயகி தம்பதியினருக்கு 07.07.1859 அன்று மகனாகப் பிறந்தார்.

தென்னிந்தியா முழுவதும் சென்று ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையை நேரில் கண்டறிந்த இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், சாதிக்கொடுமையிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான வழியினை காணும் பணியில் ஈடுபட்டார். ஆதிதிராவிட மக்களின் நலனுக்காக இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் தன் ஆயுள் முழுவதும் அயராது பாடுபட்டு, அம்மக்களுக்கு குடியிருக்க வீட்டுமனைப் பட்டாக்களும், விவசாயம் செய்வதற்கு நிலங்களும், குழந்தைகளுக்கு கல்வி வசதியும் பெற்றுத்தந்தார். பஞ்சமி நிலங்களை மீட்டார். இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் 1895ஆம் ஆண்டு சென்னை வந்த ஆங்கிலேய அதிகாரி வைஸ்ராய் லார்டு எல்சின் என்பவரிடம் மக்களுடன் நேரில் சென்று கோரிக்கை மனு அளித்தார்.

தொடர்ந்து மக்கள் பணி செய்த இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு ஆங்கிலேய அரசு 1926ஆம் ஆண்டு 'ராவ் சாகிப்', 1930ஆம் ஆண்டு 'ராவ் பகதூர்', 1936ஆம் ஆண்டு 'திவான் பகதூர்' பட்டங்களை வழங்கி கௌரவித்தது. 1940ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி தலைமையில் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் முன்னிலையில் 'திராவிட மணி' எனும் பட்டம் வழங்கப்பட்டது. ஆதிதிராவிட மக்களின் நலனுக்காக தன் ஆயுள் முழுவதும் அயராது பாடுபட்ட இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் 18.09.1945 அன்று இயற்கை எய்தினார்.

பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த இடமான காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் அருகில் உள்ள கோழியாளம் கிராமத்தில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபமும், அதிலேயே நூலகமும் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.2.2019 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண். 110ன் கீழ் அறிவித்தார்கள். அதன் அடிப்படையில், மணிமண்டபம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இரட்டைமலை சீனிவாசன் அவர்களை பெருமைப்படுத்தும் விதமாக அன்னாரின் பிறந்தநாளான ஜூலை 7ஆம் நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, தமிழக அரசின் சார்பில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(7.6.2019) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**